✦ ஜனவரி - மார்ச் 2021 ✦ மொட்டு 13 ✦ மலர் 38
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி. மலர்

மகளிர் சுய உதவிக்குழு புத்துணர்வு இதழ்

2020 ஆம் ஆண்டில் இயற்கை எய்திய ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு

**வாழ்க்கை பாதுகாப்பு நிதி**

**₹ 5.89 கோடி**



# இயக்குநர் இதயத்திலிருந்து

அன்பு உறுப்பினர்களே!
ஊக்குனர்களே!!

## வணக்கங்களும்! வாழ்த்துகளும்!!

கொரோனா முதல் அலையின் சுவடு மறைவதற்குள் மீண்டும் வீரியமாக இரண்டாவது அலை பரவி வருவது நம் அனைவருக்கும் அதிர்ச்சியே..

இவ் இக்கட்டான காலக்கட்டத்திலும் நாம் வளர்ச்சி பாதையில் நடைபோடுகிறோம் என்பது மனநிறைவு தரும் செய்தியாகும். அரசு மற்றும் நமது ஒவ்வொருவரின் தனிப்பட்ட முயற்சியாலும் கொரோனா நோய் தொற்றினால் நமது உறுப்பினர்கள் அதிகம் பாதிக்கப்படவில்லை என்பது சற்றே ஆறுதல் அளிக்கிறது.

"வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்" என்பதற்கேற்ப, கொரோனா நோய் தொற்று மற்றும் அதன் விளைவாக பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட பல்வேறு தரப்பு விளிம்பு நிலையில் வாழும் மக்களின் துயர் துடைக்கும் பொருட்டு ரூ. 62 இலட்சம் மதிப்பிலான உணவு பொருட்களை நிவாரணமாக வழங்கியுள்ளோம்.

**மேலும் நமது பணியாளர்களின் அயராத பணிகளின் விளைவாக நமது சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 14,676 ஆக உயர்ந்துள்ளது. உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 2,64,168 ஆக உயர்ந்துள்ளது. அத்தோடு நம் உறுப்பினர்களின் அத்தியாவசிய கடன் பெறும் வரம்பை ரூ. 1,00,000 ஆக உயர்த்தியுள்ளோம். இவ்வாறு சென்ற நிதியாண்டில் நம் உறுப்பினர்கள் ரூ. 643.52 கோடியை வங்கிக் கடனாகவும், ரூ. 267.05 கோடியை சங்கக் கடனாகவும், ரூ. 25.22 கோடியை ஐ.வி.டி.பி. கடனாகவும், ரூ. 16 கோடியை சுகாதாரக் கடனாகவும் என மொத்தம் ரூ. 951.79 கோடியை கடன் சுழற்சி செய்து தங்களின் பல்வேறு அவசியத் தேவைகளை நிறைவு செய்து கொண்டுள்ளனர்.**

இவ்வாறு நமது மகளிர் மேம்பாட்டு பணிகளோடு இணைந்து நாம் மேற்க்கொள்ளும் கல்வி, சமூக மேம்பாடு, பணியாளர் மற்றும் உறுப்பினர் நலன் சார்ந்த பணிகளுக்காக கடந்த ஆண்டில் **ரூ. 8.77** கோடியை வழங்கியுள்ளோம்.



இறுதியாக நம் முதல் முயற்சியாகவும் முன் முயற்சியாகவும், பல்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் நமது சுய உதவிக்குழுக்களை ஒருங்கிணைத்து தனி வங்கி வசதியுடன் கூடிய பகுதி அலுவலகங்களை உருவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக நம் கிருஷ்ணகிரி நகரில் புதியதாக, உருவாக்கியுள்ள சுய உதவிக் குழுக்களுக்கான தொழிற்பயிற்சி மைய வளாகத்தில் தமிழ்நாடு கிராம வங்கியின் சிறப்பு கிளை துவங்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கடந்த காலங்களைச் போலவே, வரும் ஆண்டுகளிலும், ஐ.வி.டி.பி. உங்களோடு பயணித்து, உங்களை முன்னேற்ற பாதையில் இட்டுச்செல்லும் என உறுதியளிக்கிறேன். எனவே நாம் இணைந்து செயல்படுவோம், வாழ்வை வளமாக்குவோம்.

என்றும் மக்கள் பணியில்...

**குழந்தை பிரான்சிஸ்**

நிறுவனர் தலைவர்
ஐ.வி.டி.பி., கிருஷ்ணகிரி




# ஐ.வி.டி.பி பணியாளர் குழந்தைகளுக்கான

# கல்வி உதவித்தொகை

**₹ 4 இலட்சம்**

> ஒன்றை உன்னால் கனவுகாண முடியுமாயின் அதனை உன்னால் செய்யவும் முடியும்.
>
> – வால்ட் டிஸ்னி

ஐ.வி.டி.பி பணியாளர்களில் தொடர்ந்து 5 வருடங்களுக்கு மேல் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. முதல் வகுப்பு முதல் கல்லூரி படிப்பு வரை அவர்களின் கல்விக்கு தகுந்தவாறு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**கொரோனா ஊரடங்கினால் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படாத நிலையில் கல்லூரியில் பயிலும் 40 மாணவர்களுக்கு தலா ரூ. 10,000 என**

**₹ 4 இலட்சம்**

**கல்வி உதவித்தொகையாக**
**இவ்வாண்டு வழங்கப்பட்டது.**

இதுவரை இத்திட்டத்தின் கீழ் ₹ **1.04** கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.




### கணவரை இழந்த ஐ.வி.டி.பி உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான

# கல்லூரிக் கல்வி உதவித்தொகை

**₹ 9.2 இலட்சம்**

ஐ.வி.டி.பி நிறுவனத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களில் கணவரை இழந்து மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் உறுப்பினர்களுக்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பயன்பெறும் மாணவர்கள் முந்தைய ஆண்டு நடைபெற்ற பருவ தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம். ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்லூரியில் பயின்றாலும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது.




**இவ்வருடம் கல்லூரியில் பயிலும் 92 மாணவர்களுக்கு ₹ 9.2 இலட்சம் மதிப்பிலான கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.**

**இதுவரை இத்திட்டத்தின் கீழ் ₹ 2.05 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

> “ தொலைந்து போகாமல் சில அழகான பாதைகளை கண்டுபிடிக்க முடியாது. ”

₹ 5.89 கோடி

2020 ஆம் ஆண்டில் இயற்கை எய்திய ஐ.வி.டி.பி. மகளிர் சுயஉதவிக்குழு

உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு

# வாழ்க்கை பாதுகாப்பு நிதி

ஐ.வி.டி.பி மகளிர் சுயஉதவிக் குழுக்களில் ஒவ்வொரு ஆண்டும் உடல்நலக்குறைவு மற்றும் பல்வேறு காரணங்களால் ஒருசில உறுப்பினர்கள் இறந்துவிடுகிறார்கள். அவர்களின் மறைவு அவர்கள் குடும்பத்திற்கும், குழுவிற்கும் பேரிழப்பாகும். அத்தகைய சூழ்நிலையில் அக்குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் ஆதரவு அளிக்கும் வண்ணம் ஐ.வி.டி.பி நிறுவனரால் ஏற்படுத்தப்பட்டது வாழ்க்கை பாதுகாப்பு நிதி உதவியாகும்.



இத்திட்டத்தின்படி இறந்த உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு ரூ. 50,000மும், விபத்து போன்ற காரணங்களினால் நிரந்த ஊனமுற்றவர்களுக்கு ரூ. 25,000மும் வாழ்க்கை பாதுகாப்பு நிதி உதவியாக ஐ.வி.டி.பி மூலம் வழங்கப்படுகிறது. மேலும் உறுப்பினர்கள் இறந்த அன்று ஈமச்சடங்கிற்காக ரூ. 5,000 குழு உறுப்பினர்களால் நேரடியாக வழங்கப்படுகிறது.

**இவ்வாண்டு மறைந்த 1071 உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு**

## ₹ 5.89 கோடி

**வாழ்க்கை பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டது.**

**இதுவரை இத்திட்டத்தின் மூலம் 7901 மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு ரூ.38 கோடி வழங்கப்பட்டுள்ளது.**




## வாழ்க்கை என்பது

| | | |
|---|---|---|
| ஒரு சந்தர்ப்பம் | : | நழுவ விடாதிருங்கள் |
| ஒரு கடமை | : | நிறைவேற்றுங்கள் |
| ஒரு இலட்சியம் | : | சாதியுங்கள் |

| | | |
|---|---|---|
| ஒரு சந்தர்ப்பம் | : | நழுவ விடாதிருங்கள் |
| ஒரு கடமை | : | நிறைவேற்றுங்கள் |
| ஒரு இலட்சியம் | : | சாதியுங்கள் |

- APJ



₹13 இலட்சம்

## ஐ.வி.டி.பி பணியாளர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கு

# வீடு வழங்கும் திட்டம்

ஐ.வி.டி.பி நிறுவனமானது கடந்த ஆண்டுகளில் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் ஐ.வி.டி.பி உறுப்பினர்களை தேர்வு செய்து அவர்களுக்கு வீடு வழங்கி உள்ளது.

**அத்திட்டத்தின் தொடர்ச்சியாக இவ்வாண்டு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் 6 பணியாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு தலா ரூ. 2 இலட்சம் மதிப்பில் வீடு கட்டி வழங்கி உள்ளது. மேலும் ஒரு பணியாளர் ஏற்கனவே தான் கட்டிய வீட்டை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 7 வீடுகளின் மொத்த மதிப்பு ரூ. 13 இலட்சம் ஆகும்.**

இத்திட்டத்தில் பயன்பெற பயனாளிகளுக்கு சொந்த இடம் இருப்பது அவசியமாகும்.

> *"செயல் அனைத்து வெற்றிகளுக்கும் அடித்தளமாகும்."*

# ரூ. 2 இலட்சத்தில் புதிய வீடு அமைத்துக் கொண்ட பணியாளர்கள்



1. திருமதி. செண்பகவள்ளி, வண்டிகாரன் கோட்டை, காரிமங்கலம்



2. திருமதி. செல்வராணி, சீரியம்பட்டி, பாலக்கோடு



3. திருமதி. மஞ்சு, காரிமங்கலம்



4. செல்வி. மகாலட்சுமி, பழைய பேட்டை, கிருஷ்ணகிரி

5. திருமதி. மாது, அஞ்செட்டி 6. திருமதி. மகேஸ்வரி, பூசாரிப்பட்டி

**ரூ. 1 இலட்சத்தில் வீட்டை மேம்படுத்திக் கொண்ட பணியாளர் : 7. திருமதி.சத்யா, தருமபுரி**

> கடந்த காலங்களை நம்மால் மாற்றவோ மறக்கவோ திருத்தியமைக்கவோ முடியாது.
> நடந்தவைகளை ஏற்கத்தான் வேண்டும். ஆனால் எதிர்காலத்தை மாற்ற முடியும்.
> **இறுதியான முடிவினை உறுதியாக எடு!**

# திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரிக்கு ஐ.வி.டி.பி.யின் கல்விப்பணிகள்

₹24 இலட்சம்

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியானது பழம் பெருமை வாய்ந்த சிறந்த கல்லூரியாகும். அருந்தந்தையர்களின் வழிகாட்டுதலால் பல எண்ணற்ற ஆளுமைகளையும், திறமையான மாணவர்களையும் இக்கல்லூரி உருவாக்கி வருகிறது. இக்கல்லூரியின் பெருமையை உணர்ந்து ஐ.வி.டி.பி நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் வளர்ச்சிக்காக பல கல்விப் பணிகளை ஆற்றி வருகிறது.



பிற்படுத்தப்பட்ட ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்த 20 மாணவர்களுக்கு **தலா ரூ.1800 என** **ரூ.36 ஆயிரம்** மதிப்பிலான **பேக்** வழங்கப்பட்டது.

பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான **கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ்** **121 மாணவர்களுக்கு ரூ. 9.22 இலட்சம்** **கல்வி உதவித்தொகையாக** வழங்கப்பட்டுள்ளது.

# இவ்வருடம் இக்கல்லூரிக்கு வழங்கப்பட்ட ஐ.வி.டி.பியின் கல்விப் பணிகள்

மிகவும் பிற்படுத்தப்பட்ட 100 ஏழை மாணவர்களுக்கு **தலா. ரூ. 7500 என ரூ.7.5 இலட்சம் கல்வி உதவித்தொகை** வழங்கப்பட்டுள்ளது.







கல்லூரியின் சுயநிதிப் பிரிவில் பணியாற்றும் பேராசிரியர்கள் 133 பேருக்கு **தலா ரூ.4000 என ரூ. 5.32 இலட்சம்** மதிப்பிலான **டின்னர் செட்** பரிசாக வழங்கப்பட்டது.

பேராசிரியர்களில் மாணவர்களுக்கு கற்பிக்க மடிக்கணினி இல்லாத 4 பேராசிரியர்களை தேர்வு செய்து அவர்களுக்கு **ரூ.1.5 இலட்சம்** மதிப்பிலான **மடிக்கணினி** வழங்கப்பட்டது.




ஐ.வி.டி.பி. மூலம் இதுவரை இக்கல்லூரிக்கு **ரூ. 83 இலட்சம்** மதிப்பிலான **கல்விப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**



தருமபுரி
தொன்போஸ்கோ
கல்லூரியில் பயிலும்
**103 மாணவர்களுக்கு**
**₹ 8.1 இலட்சம்**

# பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை திட்டம்



ஏலகிரி
தொன்போஸ்கோ
கல்லூரியில்
பயிலும்
**74 மாணவர்களுக்கு**
**₹ 5.6 இலட்சம்**



" உன்னையே நீ நம்பு ஓர் நாள் உயர்வு நிச்சயம்...! "

தருமபுரி தொன்போஸ்கோ
B.Ed., கல்லூரியில் பயிலும்
**5 மாணவர்களுக்கு**
**தலா ரூ. 10,000 என**
**₹ 50,000**



காரிமங்கலம் அரசு மகளிர்
கல்லூரியில் பயிலும்
**112 மாணவிகளுக்கு**
**₹ 2.8 இலட்சம்**



நாமக்கல் மாவட்டம்,
மெட்டாலா இலொயோலா
கல்லூரியில் பயிலும்
**19 மாணவர்களுக்கு**
**₹ 1.5 இலட்சம்**



வேட்டவலம் இலொயோலா
கல்லூரியில் பயிலும் **51 மாணவர்களுக்கு**
**₹ 4 இலட்சம்**

கிருஷ்ணகிரி
புனித லூயிஸ் செவிலியர்
பயிற்சி பள்ளியில் பயிலும்
**10 மாணவிகளுக்கு**
**₹ 87,000**

**இவ்வாண்டு 746 மாணவர்களுக்கு**
**ரூ. 52 இலட்சம் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**
**இத்திட்டதிற்காக இதுவரை ரூ. 2.05 கோடி செலவிடப்பட்டுள்ளது.**

“ நீ இழந்ததை நினைத்து வருந்தினால் இருப்பதையும் இழந்து விடுவாய்.
நீ இருப்பதை நினைத்து மகிழ்ந்தால் இழந்ததையும் அடைந்து விடுவாய்...!! ”



## அரசுப்பள்ளி மாணவர்களின் மருத்துவக் கல்வியை ஊக்குவிக்க

# NEET நுழைவுத்தேர்வு பயிற்சி புத்தகம் ₹ 4 இலட்சம் மதிப்பில் ஐ.வி.டி.பி வெளியீடு

தற்போது மருத்துவக் கல்வி படிப்பில் சேர்வதற்கு NEET என்று அழைக்கப்படும் நுழைவுத்தேர்வு அவசியமானதாக உள்ளது. CBSE கல்வி முறை மற்றும் மெட்ரிக் கல்வி முறையில் படிப்பவர்களுக்கு கூட கடினமானதாக உள்ள NEET நுழைவுத்தேர்வு அரசுப்பள்ளி மாணவர்களுக்கு எட்டாக் கனியாக இருந்து வருகிறது. தற்போது அரசு வழங்கியுள்ள இடஒதுக்கீடு முறையால் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தால் மருத்துவக்கல்வி பயில இயலும் என்பதை உணர்ந்து கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. பால முரளி அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று **ரூ.4 இலட்சம்** மதிப்பிலான தமிழ், ஆங்கில வழி NEET நுழைவுத்தேர்வு பயிற்சி புத்தகங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் NEET பயிற்சி பெறும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி மூலம் இலவசமாக வழங்கப்பட்டது.

> “ நீங்கள் எத்தனை இலக்குகளை அடைந்தாலும், உங்கள் பார்வையை உயர்ந்த இலக்கின் மேல் வையுங்கள். ”
>
> – ஜெசிகா சானிட்ச்

# ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி மாணவர்களுக்கு ₹ 1.4 இலட்சம் மதிப்பில் ஐ.வி.டி.பி கல்வி உதவித் தொகை

கொரோனா நோய்த்தொற்று பொது ஊரடங்கினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் மாணவர்களிடமிருந்து கல்வி கட்டணம் பெறுவது பள்ளிகளுக்கு பெரும் சவாலாக இருந்து வருகிறது. இதற்கு ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியும் விதி விலக்கல்ல. அதை உணர்ந்து ஐ.வி.டி.பி நிறுவனமானது ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியில் கல்வி பயின்றால் அவர்களில் ஒரு மாணவனின் கல்வி கட்டணத்தை வழங்க முன்வந்து **இவ்வருடம் 8, 9, 10 வகுப்புகளில் பயிலும் 30 மாணவர்களுக்கு ரூ. 1.4 இலட்சம் கல்வி உதவித்தொகையாக வழங்கியது.**





உதடே ஒட்டாத குறள் எது தெரியுமா?

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

எந்தெந்தப் பொருள்களில் எல்லாம் மனமானது விலகி இருக்கிறதோ,
அந்தப் பொருள்களால் நமக்குத் துன்பம் கிடையாது. மனது ஒட்டாமல் இருக்க வேண்டும்.
என்று சொல்லக்கூடிய இந்தக் குறளை உச்சரிக்கும்போது உதடுகள் கூட ஒட்டாது.
**உதடு ஒட்டாமல் உச்சரிக்கக்கூடிய ஒரே குறள் இதுமட்டும்.**

# கணினி ஆய்வகத்தின் மூலம் பள்ளிக் கல்வியை மேம்படுத்த

₹ **8.7 இலட்சம்** உதவி



கிருஷ்ணகிரி மாவட்டம் – கெரிக்கேபள்ளி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு 5 **கணினிகள்** கொண்ட கணினி ஆய்வகம்
**ரூ.1.5 இலட்சம்**

தர்மபுரி மாவட்டம் – உம்மியபட்டு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு 12 **கணினிகள்** கொண்ட கணினி ஆய்வகம்
**ரூ.3.2 இலட்சம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் – எலத்தகிரி புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளிக்கு 15 **கணினிகள்** கொண்ட கணினி ஆய்வகம்
**ரூ. 4 இலட்சம்**

தற்போது உள்ள அறிவியல் மேம்பாட்டில் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்கள் கணினி கல்வியில் தேர்ந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு கணினிக் கல்வி பயில போதுமான கணினிகள் இருந்தால் அவர்களின் பள்ளிக் கல்வி இன்னும் எளிதாகும் என்பதால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு ஐ.வி.டி.பி நிறுவனமானது கணினி ஆய்வகங்கள் அமைக்க உதவி வருகிறது.

**இதுவரை மொத்தம் ரூ. 1.82 கோடி மதிப்பில் கணிணிகள் மற்றும் கணிணி ஆய்வகங்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.**






"தன்னம்பிக்கை இருக்கும் அளவுக்கு முயற்சியும் இருந்தால் தான் வெற்றி சாத்தியம்..."

வேலூர், அக்சீலியம் கல்லூரி பேராசிரியர்களுக்கு

# இணைய வழிக் கற்பித்தலை எளிதாக்க

**ஐ.வி.டி.பி. யின் ₹ 9 இலட்சம், பேராசிரியர்களின் ₹ 9 இலட்சம் பங்களிப்புடன் 86 TAB நன்கொடை**

₹ 9 இலட்சம் உதவி



> நீங்கள் உண்மையில் எவ்வளவு தூரம் செல்ல முடியும் என்பதைக் கண்டறிய நீங்கள் அதிக தூரம் செல்ல வேண்டும்.

வேலூர் அக்சீலியம் மகளிர் கல்லூரியின் சுயநிதி கல்விப் பிரிவில் பணியாற்றும் பேராசிரியர்கள் இணைய வழியில் கற்பிக்க Tab வழங்கி உதவுமாறு ஐ.வி.டி.பி நிறுவனரை கேட்டுக் கொண்டனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்று கொண்ட ஐ.வி.டி.பி நிறுவனர் Tab-யின் மதிப்பில் பாதித்தொகையை பேராசிரியர்களும், மீதித்தொகையை ஐ.வி.டி.பி. நிறுவனமும் ஏற்றுக்கொள்ள முடிவு செய்து நவீன வசதிகள் கொண்ட தலா **ரூ. 20,940** மதிப்பிலான சாம்சங் **Tab 86 பேராசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.18 இலட்சம். அதில் பாதித்தொகையான ரூ.9 இலட்சம் ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கியது.**

# விளையாட்டு துறை மாணவர்களுக்கு ஊக்கப்பரிசு



## ₹ 30,000

மாணவர்கள் விளையாட்டு துறையில் மாவட்ட, மாநில, தேசிய அளவில் முதல் இடங்களில் வெற்றி பெற்றால் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு ஐ.வி.டி.பி மூலம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

**இவ்வாண்டு 4 மாணவர்களுக்கு ரூ. 30,000 வழங்கப்பட்டது.**



**கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனைக்கு ரூ.4 இலட்சம் மதிப்பிலான வெண்டிலேட்டர் நன்கொடை. இதுவரை இம் மருத்துவமனைக்கு ரூ. 21 இலட்சம் மதிப்பிலான பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

# ₹ 3.2 இலட்சம் மதிப்பிலான தங்கக் காதணி பரிசு



ஓசூர் செயிண்ட் ஜோசப் கல்லூரியில் பயிலும் தங்க காதணி அணியாத 13 மாணவிகளுக்கு தலா ரூ.12,825 மதிப்பில் தங்க காதணி பரிசாக வழங்கப்பட்டது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 1,66,725 ஆகும்.



ஏலகிரி தொன்போஸ்கோ கல்லூரியில் பயிலும் தங்க காதணி அணியாத 12 மாணவிகளுக்கு தலா ரூ.12,825 மதிப்பில் தங்க காதணி பரிசாக வழங்கப்பட்டது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 1,53,900 ஆகும்.



### பர்கூர்
# கன்கார்டியா மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட ஐ.வி.டி.பி.
# ₹ 11 இலட்சம் நிதியுதவி




பர்கூர் கன்கார்டியா மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் நலன் கருதி கூடுதலாக 5 வகுப்பறைகள் கட்டி வழங்க பள்ளி நிர்வாகம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஐ.வி.டி.பி. மூலம் **ரூ. 11 இலட்சம்** மதிப்பில் **5 வகுப்பறைகள்** கட்டி வழங்கப்பட்டது.

**இதுவரை இப்பள்ளிக்கு ரூ. 18.5 இலட்சம் மதிப்பிலான கல்விப்பணிகளை ஐ.வி.டி.பி. மேற்கொண்டுள்ளது.**



“ முற்கள் குத்தி விட்டதே என முள்ளை குறை கூறாமல், காலை தவறான இடத்தில் வைத்து விட்டோமே என. பாதை மாற்றுவர்களே புத்திசாலிகள்..! ”

# ஐ.வி.டி.பி நிறுவனத்திற்கு வருகை புரிந்தவர்கள்



● எலத்தகிரி கொன்சாகா கல்லூரி சமூகப்பணி மாணவியர் வருகை



● தர்மபுரி தொன்போஸ்கோ கல்லூரி சமூகப்பணி மாணவர்கள் வருகை

# ஐ.வி.டி.பி நிறுவனத்திற்கு வருகை புரிந்தவர்கள்



பெல்லா நிறுவனத்திலிருந்து மேலாளர்கள் வருகை




வேலூர் அக்சீலியம் கல்லூரி பேராசிரியர்களுடன் ஐ.வி.டி.பி. "மகளிர் தின கொண்டாட்டம்"

# ஐ.வி.டி.பி நிறுவனர் கலந்து கொண்ட நிகழ்வுகள்



கிருஷ்ணகிரி நகரில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான தொழிற்பயிற்சி மைய கட்டிடத்தில் ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக தனியாக செயல்படும் வகையில் **தமிழ்நாடு கிராம வங்கியின் கிளை** திறக்கப்பட்டது. அதை ஐ.வி.டி.பி தலைவர் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.




நீலகிரி மாவட்டத்திற்கு ஐ.வி.டி.பி நிறுவனர் செய்துள்ள பணிகளை பாராட்டி நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. **இன்னசென்ட் திவ்யா**, இ.ஆ.ப அவர்களால் பாராட்டு கேடயம் வழங்கப்பட்டது.

# ஐ.வி.டி.பி நிறுவனர் கலந்து கொண்ட நிகழ்வுகள்




மகளிர் தின விழா, லொயோலா ஒருங்கிணைந்த உருவாக்கல் மையம், அரூர்

## திரிபுரா மாநிலம், வடக்கு புலின்புர் மோகர்பரா
## நோட்டர் டேம் பள்ளிக்கு ஐ.வி.டி.பி.யின் கல்விப்பணிகள்

₹10 இலட்சம் மதிப்பில்



திரிபுரா மாநிலத்தில், மோகர்பரா நோட்டர் டேம் பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த **ரூ. 10 இலட்சம்** மதிப்பில் **9 ஸ்மார்ட் போர்டுகள், 9 யுபிஎஸ், 9 கணினி** போன்றவை ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டது.

# மகளிருக்கான சுகாதார விழிப்புணர்வு

**பொதுவான சுகாதார பழக்கவழக்கங்கள்**

- கைகளை அடிக்கடி சோப்பை பயன்படுத்தி கழுவ வேண்டும்.
- நாம் பயன்படுத்தக்கூடிய உள்ளாடைகளை 6 மாதத்திற்கு ஒருமுறை கண்டிப்பாக மாற்ற வேண்டும்.
- காற்றோட்டத்தை அனுமதிக்கக்கூடிய உள்ளாடைகளை (பருத்தி ஆடைகளை) பயன்படுத்த வேண்டும்.

**பெண்கள் மாதவிடாய் காலங்களில் கடைபிடிக்க வேண்டிய சுகாதார பழக்க வழக்கங்கள் மற்றும் உணவு முறைகள்**

- மாதாவிடாய் காலங்களில் துணியை பயன்படுத்தக் கூடாது
- நாப்கினை பயன்படுத்துவதற்கு முன்னும் பயன்படுத்திய பின்னும் கைகளை நன்கு சோப்பால் கழுவ வேண்டும்.
- மீதமுள்ள நாப்கின் பாக்கெட்டை திறந்தவாறு வைக்க கூடாது.
- ஒரு நாப்கினை கண்டிப்பாக 6 முதல் 8 மணி நேரம் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- இரத்தத்தில் ஹீமோகுளோபினை அதிரிக்க நாம் மாதுளம் பழம், அத்தி பழம், பெரிய நெல்லிக்காய், கருப்பு உலர் திராட்சை, பேரிச்சை, முருங்கைக்கீரை இவற்றை எடுத்து கொள்ளவேண்டும்.
- மேலும் உப்பு மற்றும் சர்க்கரை உட்கொள்ளும் அளவை குறைத்துக்கொள்ள வேண்டும்.

**அரிப்பு மற்றும் எரிச்சல் போன்ற பிரச்சனைகளை தவிர்க்கும் வழிமுறைகள் மற்றும் அதற்கான தீர்வுகள்**

- எப்பொழுதும் காற்றோட்டத்தை அனுமதிக்கக் கூடிய நாப்கின்களை பயன்படுத்த வேண்டும்.
- நாள்தோறும் நமது பிறப்புறுப்பை சுத்தம் செய்வதற்காக சோப்பை பயன்படுத்த கூடாது. இவ்வாறு பயன்படுத்துவதனால் அந்த இடத்தில் காரத்தன்மை அதிகரித்து அரிப்பு எரிச்சல் போன்ற பிரச்சனைகள் உருவாகிறது. அதற்கு பதிலாக, சிறப்பான இண்டிமேட் வாஷ்கள் உள்ளன. இவற்றை பயன்படுத்தி சுத்தம் செய்யும்போது தோலின் இயற்கை தன்மையை காத்துகொள்ள உதவுகிறது.

**நாப்கின் பயன்பாடு மற்றும் அகற்றும் வழிமுறைகள்**

- நாப்கினை பயன்படுத்திய பிறகு அதை உட்புறமாக சுருட்டி காகிதத்தில் மடக்கி குப்பைத் தொட்டியில் போட வேண்டும் அல்லது எரித்து விட வேண்டும்.
- ஒரே நேரத்தில் இரண்டு நாப்கின்களை பயன்படுத்த கூடாது.

**சிறந்த நாப்கினை தேர்ந்தெடுக்கும் முறை**

- நமது சருமத்திற்கு ஏற்றவாறு நாப்கின்களை தேர்ந்தெடுத்து பயன்படுத்த வேண்டும். சருமத்தை 2 விதமாக பிரிக்கலாம். மென்மையான சருமம் மற்றும் சாதாரண சருமம். மென்மையான சருமத்திற்கு, மென்மையான மேற்பரப்புடன் கூடிய நாப்கின்களும், சாதாரண சருமத்திற்கு உலர் தன்மை கொடுக்கக் கூடிய நாப்கின்களும் உள்ளன.

**எப்படிப்பட்ட நேரங்களில் மகப்பேறு நல மருத்துவரை அணுக வேண்டும்.**

- ஒரு மணி நேரத்தில் ஒரு நாப்கினிற்கு மேல் மாற்ற வேண்டியிருந்தாலோ மற்றும் 7 நாட்களுக்கு மேலாக மாதவிடாய் இருந்தாலோ மருத்துவரை அணுக வேண்டும்.
- 2 மாதத்திற்கு ஒரு முறை மாதவிடாய் ஏற்பட்டால் மருத்துவரை அணுக வேண்டும்.
- வெள்ளைப்படுதல் என்பது ஒரு இயற்கையான நிகழ்வு ஆனால் அது வெள்ளை நிறத்தில் துர்நாற்றம் இல்லாமல் இருந்தால் இயற்கையானது. வெவ்வேறு நிறங்களில் துர்நாற்றத்துடன் இருந்தால் கண்டிப்பாக மருத்துவரை அணுக வேண்டும்.
- சிறுநீர் கழிக்கும்போது வலி ஏற்பட்டாலும் மருத்துவரை அணுக வேண்டும்.

**வெள்ளைப்படுதலை குறைக்க பின்வரும் வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.**

- உள்ளாடைகளை ஈரமாக வைத்திருக்க கூடாது.
- ஆடைகளை வெயிலில் உலர்த்த வேண்டும்.
- சோப்பை பயன்படுத்தி பிறப்புறுப்பை சுத்தம் செய்ய கூடாது.
- வாசனை திரவியம் கலந்த நாப்கின்களை பயன்படுத்த கூடாது.
- பருத்தியினால் ஆன உள்ளாடைகளை பயன்படுத்த வேண்டும்.
- உடல் வெப்பத்தை குறைக்க வேண்டும்.

**வலி நிவாரணியாக பயன்படக்கூடிய சமையல் பொருட்கள்**

மாதவிடாய் காலங்களில் அதிகமான வயிறு வலி இருக்கும்போது வீட்டில் சமையலுக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்களை கொண்டு குறைக்கலாம். அவை பின்வருமாறு

- நல்லெண்ணெய் கொண்டு அடி வயிற்றில் மெதுவாக தடவுவதனால் வயிறு வலி குறையும்.
- ஒரு பாட்டிலில் சுடு தண்ணீர் எடுத்துக்கொண்டு, அதை வைத்து மசாஜ் செய்வதன் மூலமும் வயிறு வலி குறையும்.
- காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் வெந்தயம் சாப்பிட்டு வந்தால் மாதவிடாய் காலங்களில் ஏற்படும் வயிறு வலி குறையும்.
- இஞ்சியை வேகவைத்து வடிகட்டி அதனுடன் தேன் மற்றும் எழுமிச்சம்பழம் சேர்த்து குடித்து வந்தால் வயிறு வலி குறையும்.
- பட்டை பொடியை சுடுதண்ணீரில் கலந்து குடிப்பதன் மூலம் வயிறு வலி குறையும்.
- இலகுவான உடற்பயிற்சி செய்வதன் மூலம் வயிறு மற்றும் முதுகு பகுதிகளில் இரத்த ஓட்டம் சீராவதனால் வயிறு மற்றும் முதுகு பகுதிகளில் வலி குறையும்.

**மாதவிடாய் காலங்களில் சுகாதார பழக்கவழக்கங்களை கடைபிடிக்க தவறினால் ஏற்படும் விளைவுகள்**

- துர்நாற்றம், அரிப்பு, அசௌகரியம், பாக்டீரியா தொற்று, கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மலட்டுத்தன்மை போன்றவை ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு







## குழுக்களை தர நிலைப்படுத்தும் வழிமுறையில் இவ்வாண்டு

வெண்கலக்குழு | வெள்ளிக்குழு | தங்கக்குழு | வைரக்குழு

| தரம் | குழுக்களை தர நிலைப்படுத்தும் வழிமுறையில் | வங்கி கடன் தொகை |
|---|---|---|
| வெண்கலக் குழு BRONZE GROUP | 5 ஆண்டுகளாக இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல் திருப்பி செலுத்துதலில் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல் | ₹ 10,000 முதல் ₹ 60,000 வரை |
| வெள்ளிக் குழு SILVER GROUP | 5 ஆண்டுகளிலிருந்து 7 வருடங்கள் வரை இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குனர் A★ தரநிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 75,000 வரை |
| தங்கக் குழு GOLD GROUP | 7 ஆண்டுகளிலிருந்து 10 வருடங்கள் வரை இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குனர் A★ தரநிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 1,00,000 வரை |
| வைரக் குழு DIAMOND GROUP | 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குனர் A★ தரநிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 1,20,000 வரை |

செயல்படாத குழு : (D) இக்குழுக்கள் எவ்வகை கடன்களும் பெற தகுதியற்ற குழுக்கள்

| தரம் | ஊக்குநர்களை தர நிலைப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|
| A | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல் கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலின் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல் |
| A★ | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல் கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலின் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் மற்றும் குழுவின் அனைத்து பதிவேடுகளையும் ஊக்குநர் அல்லது குழு உறுப்பினர்களே முறையாக பராமரித்தல் |

## சங்கக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | சங்க கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது |
|---|---|---|
| ₹ 25,000 – ₹ 1,00,000 வரை | ₹ 40,000 வரை | 1 லிருந்து 5 வருடத்திற்கு மேல் |
| ₹ 1,25,000 வரை | ₹ 50,000 வரை | 6 லிருந்து 10 வருடத்திற்கு மேல் |
| ₹ 1,50,000 வரை | ₹ 50,000 வரை | 10 வருடத்திற்கு மேல் |

## சிறப்புக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | சிறப்பு கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது | உறுப்பினரின் மொத்த கடன் தொகை |
|---|---|---|---|
| ₹ 25,000 | ₹ 25,000 வரை | 2 வருடத்திற்கு மேல் 5 வருடம் வரை | ₹ 60,000 வரை |
| ₹ 50,000 – ₹ 1,00,000 | ₹ 30,000 வரை | 5 வருடத்திற்கு மேல் 10 வருடம் வரை | ₹ 60,000 வரை |
| ₹ 1,25,000 | ₹ 30,000 வரை | 8 வருடத்திற்கு மேல் 10 வருடம் வரை | ₹ 70,000 வரை |
| ₹ 1,50,000 | ₹ 40,000 வரை | 10 வருடம் மேல் | ₹ 80,000 வரை |

## வங்கிக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் வயது | சேமிப்பு | குழுவின் நிலைவைப்பு | வங்கிக் கடன் தொகை | உறுப்பினர்களின் மொத்த கடன் தொகை |
|---|---|---|---|---|
| 1 வருட குழுக்கள் | ₹ 200 | | ₹ 10,000 முதல் ₹ 30,000 | |
| 1 – 3 வருட குழுக்கள் | ₹ 200 | ₹ 25,000 | ₹ 40,000 | ₹ 60,000 |
| 3 – 4 வருட குழுக்கள் | ₹ 200 | ₹ 50,000 | ₹ 50,000 | ₹ 80,000 |
| 4 – 5 வருட குழுக்கள் | ₹ 200 | ₹ 75,000 | ₹ 60,000 | ₹ 90,000 |
| 5 ஆண்டுகளுக்கு மேல் 7 வருடங்கள் வரை | ₹ 250 | ₹ 75,000 – ₹ 1,00,000 | ₹ 75,000 | ₹ 1,00,000 |
| 7 ஆண்டுகளுக்கு மேல் 10 வருடங்கள் வரை | ₹ 300 | ₹ 1,00,000 – ₹ 1,25,000 | ₹ 1,00,000 | ₹ 1,20,000 |
| 10 ஆண்டுகளுக்கு மேல் இயங்கும் குழுக்கள் | ₹ 300 | ₹ 1,50,000 | ₹ 1,20,000 | ₹ 1,50,000 |

# ஐ.வி.டி.பி. குழுக்கள் விபரம் (மார்ச் 2021 வரை)

✦ ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் ✦ ஐ.வி.டி.பி. கிளைகள் : 74

| விபரம் | மார்ச் 2020 வரை | ஏப்ரல் 2020 - மார்ச் 2021 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி.–யிலுள்ள மொத்த சுய உதவிக்குழுக்கள் | 13851 | 825 | 14676 |
| மொத்த சுய உதவிக்குழுக்கள் உறுப்பினர்கள் | 249318 | 14850 | 264168 |
| ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு | ₹ 772.60 கோடி | ₹ 103 கோடி | ₹ 875.60 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப் பங்கீடு | ₹ 589.00 கோடி | ₹ 72 கோடி | ₹ 661.00 கோடி |

## கடன் விவரம்

| விபரம் | மார்ச் 2020 வரை | ஏப்ரல் 2020 - மார்ச் 2021 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 3847.74 கோடி | ₹ 643.52 கோடி | ₹ 4491.26 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்க கடன் தொகை | ₹ 3463.74 கோடி | ₹ 267.05 கோடி | ₹ 3730.22 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ,வி.டி.பி. கடன் தொகை | ₹ 181.04 கோடி | ₹ 25.22 கோடி | ₹ 206.26 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத்திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 187.72 கோடி | ₹ 16.00 கோடி | ₹ 203.72 கோடி |
| **மொத்தம்** | ₹ 7679.67 கோடி | ₹ 951.79 கோடி | ₹ 8631.46 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி. (மார்ச் 2021 வரை)

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2.00 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கை பாதுகாப்பு நிதி | ₹ 38.00 கோடி |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கேரளா வெள்ளம் கஜா புயல், நீலகிரி மாவட்ட வெள்ளம் போன்ற பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக | ₹ 4.83 கோடி |
| கொரோனா நிவாரண நிதி | ₹ 0.62 கோடி |
| உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குடிசை தீ விபத்து நிதி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தின பரிசுகள் | ₹ 0.54 கோடி |
| மருத்துவமனை, சிறைகள், குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லம், ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம், கடைநிலை பணியாளர்களுக்கு நிலைவைப்பு | ₹ 2.38 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை மற்றும் இதர கல்வி பணிகளுக்காக | ₹ 28.52 கோடி |
| ஊக்குனர்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசு, உதவித்தொகை சீருடை | ₹ 6.47 கோடி |
| **கடந்த 42 ஆண்டுகளில் மனித நேயப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி. வழங்கிய தொகை** | **₹ 88.36 கோடி** |

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

## ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்

ஐ.வி.டி.பி. இல்லம், 9ஈ. சாந்தி நகர், 3வது கிராஸ், கிருஷ்ணகிரி-635 001, தமிழ்நாடு, இந்தியா
04343-232 129, 236 420 francis@ivdpkrishnagiri.org www.ivdpkrishnagiri.org